அசல்வழக்கு எண். OS.134 /2023- DW1 .

திரு.தேவராஜ் த/பெ.சின்னமாரியப்பா

நாள்:21.11.2025.

குறுக்கு விசாரணை வாதி தரப்பில்.

தாவா சொத்து எனக்கு பிதுராஜியமாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். எனது அப்பா பெயர் சின்னமாரியப்பா என்றால் சரிதான். பட்டா எண்.214 அவருடைய பெயரில் தான் இருக்கிறது என்றால் சரிதான். சின்னமாரியப்பாவிற்கு 5 குழந்தைகள் என்றால் சரிதான். 2 வது பிரதிவாதி என்னுடைய தங்ககை ஆவார். பிதுராஜிய சொத்துக்களான தாவா சொத்துக்களில் எனக்கும் எனது தங்கைக்கும் சேர்த்து 2/5 பாகம் உள்ளது என்றால் சரிதான். 2021 ம் ஆண்டில் நான் வாதிக்கு கிரய உடன்படிக்கை எழுதிகொடுத்தபோது எனக்கும் அவருக்கும் விரோதம் எதுவும் இல்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.1 ல் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதேபோல் அதில் உள்ள கையெழுத்து என்னுடைய தங்கையுடையது தான். தாவா சொத்து எங்களுக்கு பிதுராஜியமாக பாத்தியப்பட்டது என்பதும், பட்டா என் தகப்பனார் பெயரில் இருப்பதும் நான் சொல்லிதான் வாதிக்கு தெரியும் என்றால் சரிதான். வா.த.சா.ஆ.1 ல் உள்ள என் தகப்பனாரின் இறப்பு சான்றிதழ், என் தாயாரின் இறப்பு சான்றிதழ் மற்றும் அவர்களின் வாரிசு சான்றிதழ் நான் வாதியிடம் கொடுத்து தான் வா.த.சா..1 தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். 14.07.2021 ம் தேதியில் நான் வாதியிடம் ரூ.1,40,000 பெற்றுக்கொண்டு வாதிக்கு ஒரு கிரய உடன்படிக்கை பத்திரம் எழுதி கொடுத்திருக்கிறேன் என்றால் எழுதிகொடுத்திருக்கிறேன். பணம் ரூ.1 லட்சம் தான் வாங்கினேன். அது கடனுக்காக தான் எழுதி கொடுத்தேன். வா.த.சா.ஆ 1 ல் ரூ.1 லட்சம் வாங்கியதாக வாசகம் அதில் இல்லை என்றால் சரிதான். வா.த.சா.ஆ.1 ல் உள்ள சாட்சிகள், சுனில் மற்றும் மணிகண்டன் ஆகியோருக்கும் எனக்கும் விரோதம் இல்லை என்றால் சரிதான். வா.த.சா.ஆ.1 எழுதிய தேதியில் பத்திர எழுத்தரிடம் நான் ரூ.1 லட்சம் எழுதும்படி நான் எதுவும் சொல்லவில்லை என்றால் வாதி தான் பத்திரம் எழுதினார். வாதி என்னிடம் பாக்கிகிரய தொகை ரூ.10000 த்தை பெற்று

கொண்டு கிரய பத்திரம் எழுதிகொடுக்கச்சொல்லி என்னிடம் நிறைய முறை கேட்டார் என்றால் என்னிடம் கேட்கவில்லை. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்புக்கு நான் பதில் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் பதில் கொடுத்திருக்கிறேன். வா.த.சா.ஆ.1 ஐ இரத்து செய்வதற்கு நான் நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் இல்லை. நான் எனது வழக்கறிஞரிடம் பணம் திருப்பி கொடுத்ததாக எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். பஞ்சாயத்து நடந்ததா என்றால் எனது மகன் வாதியிடம் பணத்தை திருப்பி கொடுக்கசென்றபோது பணத்தை வாங்காமல் கோர்ட்டில் பார்த்துக்கொள்வதாக சொல்லிவிட்டார். ஊரில் ஒருமுறை தான் பஞ்சாயத்து நடந்தது. எதற்காக நான் வாதியிடம் பணம் வாங்கியிருந்தேன் என்றால் நான் கடைவைத்திருந்தேன். அது லாஸ் ஆனதால் பணம் வாங்கியிருந்தேன். வா.த.சா.ஆ.1ல் கடனுக்காகதான் எழுதப்பட்டது என்ற வாசகம் அதில் இல்லை என்றால் வாதி தான் தயார் செய்தார் அதனால் எனக்கு தெரியாது. நான் விருப்பட்டுதான் கிரய உடன்படிக்கை ஏழுதிகொடுத்தேன் என்றும் வாதியை ஏமாற்றுவதற்காக நான் கடனுக்காக எழுதிகொடுத்தேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பத்திர எழுத்தரிடம் நான் பிராமிசரி நோட்டோ அல்லது அடமான பத்திரமோ எழுதசொல்லி நான் கேட்வில்லை என்றால் சரிதான். வா.த.சா.ஆ.1 பதிவு செய்யப்பட்ட கிரய உடன்படிக்கை என்பதால் நான் வாதிக்கு கிரய பத்திரம் எழுதி கொடுக்கவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நான் கடனுக்கு எழுதிகொடுத்தாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

ஓம்./- எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.